Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 294

வெள்ளிக்கிழமை
16 செப்ரெம்பர் 2022

ஆவணி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## பாடசாலைகளுக்கும் 19 ஆம் திகதி விடுமுறை

கொழும்பு, செப். 16
எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை 10 ➤

# இலங்கைக்கு இந்தியா நிதியுதவி வழங்காது!

**கொழும்பு, செப்ரெம்பர் 16**

**சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் முன்னேற்றம் காணப்படுவதால், இலங்கைக்கு எதிர்காலத்தில் இந்தியா நிதியுதவி வழங்காது என்று விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. ஆயினும் இந்தியா தனது நிதியுதவியை நிறுத்தியமைக்கு இது காரணமல்லவெனவும், சீனாவுக்குச் சார்பாக தொடர்ந்து இலங்கை நடந்து கொள்வதாலேயே இந்தியா இந்த முடிவை எடுத்தது என இன்னொரு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.** 11 ➤

## இலங்கைக்கு உரம் வழங்குகிறது ஐ.நா.!

கொழும்பு, செப். 16
இலங்கையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களிடமிருந்து பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு உரம் வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை சம்மதம் தெரிவித்துள்ளது. 11 ➤





தமிழ்த் தேசிய மக்களின் வாழ்வுரிமைக்காக, இந்திய அரசாங்கத்திடம் ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணாமல் நீராகாரம் எடுத்துக்கொள்ளாமல் அஹிம்சைவழிப்போராட்டம் நடத்தி உயிர்துறந்த தியாக தீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வுகள், தமிழர் தாயகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பித்தன. (ம)

### தியாக தீபம்

## திலீபனின் அஞ்சலி நிகழ்விலும் அரசியல்வாதிகள் அசிங்கத்தனம்

யாழ்ப்பாணம், செப். 16
தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நேற்றும் குழப்பம் ஏற்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும், மணிவண்ணன் அணியினருக்கும் இடையில் திலீபனின் 10 ➤

## நினைவேந்தல்களை அரசியல் ஆக்காதீர்

### மூத்த போராளி பஷீர் காக்கா உருக்கம்

யாழ்ப்பாணம், செப். 16
திலீபனின் நினைவேந்தலில் மட்டுமல்ல, எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலைக் கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் என்று தயவுடன் வேண்டு 10 ➤

## திலீபனை அஞ்சலிப்பதில் அரசியல் செய்வோம்!

### சுகாஷ் வெளிப்படை

யாழ்ப்பாணம், செப். 16
ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, '13' ஆம் திருத் 11 ➤

### காலாவதியான பைஸர்

## உண்மையை மறைத்தே ஊசி ஏற்றப்பட்டதாம்!

யாழ்ப்பாணம், செப். 16
தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும், அவை காலாவதியானவை என்ற உண்மையை மறைத்தே மாணவர்களுக்கு கடந்த சில நாள்களாக தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்ற விவரம் 11 ➤

## தியாக தீபம் திலீபனை இழிவுபடுத்தவேண்டாம்

### விரும்பத்தகாத செயல்களுக்கு பல்கலை மாணவர்கள் கண்டனம்

கொழும்பு, செப். 16
தியாகத்தின் எல்லையைக் கேள்விக்கு உட்படுத்திய தியாக தீபம் திலீபனின் தியாகத்தை, இவ்வாறான விரும் 10 ➤

## தீர்மானங்களை அடுக்குவதால் எதுவும் நிகழப்போவதில்லை

### விமல் எக்காளம்

கொழும்பு, செப். 16
என்னதான் தீர்மானங்களை இலங்கை மீது ஐ.நா. அடுக்கடுக்காக நிறைவேற்றினாலும் இங்கு எதுவும் நடக்கப்போவதில்லை. இதைச் 11 ➤

### பெற்றோரிடம்

## பிள்ளைகள் சாக நேரிடுமென மிரட்டி பைஸரை ஏற்றுங்கள்!

### வடக்கு மருத்துவர்களுக்கு சிங்கள அதிகாரி 'ஐடியா!'

யாழ்ப்பாணம், செப். 16
பைஸர் தடுப்பூசிகளை ஏற்றாவிட்டால் 'மாணவர்கள் உயிரிழப்பார்கள் என்று பெற்றோரை அச்சுறுத்தி தடுப்பூசிகளை ஏற்றுங்கள் 10 ➤

## இருபாலையில் புலிகளின் நகைகள்?

### நீதிமன்றின் அனுமதிபெற்று விரைவில் அகழ்வுப்பணிகள்

விரிவு - பக். 11

## அறிக்கைகளால் இலங்கையை மிரட்டுவதை உடன் நிறுத்துக!

### மனித உரிமைகள் அமைப்புகளிடம் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சீற்றம்

கொழும்பு, செப். 16
'சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அறிக்கைகளை வெளியிட்டு இலங்கையை மிரட்டுவதை உடன் நிறுத்த வேண்டும்' - இவ்வாறு 12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் நீதிமன்றில் சிறிலங்காவை பாரப்படுத்தத் தவறும் ஐ.நா. தீர்மானம்

ஜெனிவா, செப்.16

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள பிரேரணையில் சிறிலங்காவை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் யோசனை உள்ளடக்கப்படவில்லை. மாறாக சிறிலங்காவின் உள்நாட்டுப் பொறிமுறையை வலுவூட்ட அழைப்பு விடுக்கும் வகையிலேயே பிரேரணை அமைந்துள்ளது.**

சிறிலங்காவில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பான எதிர்கால விசாரணைக்குத் தேவையான ஆதாரங்களை சேகரிக்கவும், பாதுகாத்து வைக்கவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ள திறனை நீடிக்கவும் வலுப்படுத்தவும் தீர்மானம் அழைப்பு விடுக்கிறது.

தீவிர இராணுவ மயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக் கூறல் இல்லாமை மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உட்பட இலங்கையின் நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படைக் காரணிகள் மற்றும் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் வரைவுத் தீர்மானம் வலியுறுத்துகிறது.

சிவில் அரசாங்க செயற்பாடுகளை தொடர்ந்து இராணுவ மயமாக்கல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான முக்கியமான நிறுவனங்களின் சுதந்திரமற்ற போக்கு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நீண்டகால குறைகள் மற்றும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் முன்னேற்றமின்மை, கண்காணிப்பு அச்சுறுத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் இறந்தவர்களை நினைவேந்தல் தடை மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை துன்புறுத்துதல் போன்றவை தொடர்பாகவும் தீர்மானம் கரிசனை செலுத்துகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்தத் தீர்மானம் வலி யுறுத்துகிறது. அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வதற்கும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான சிறிலங்காவின் கூற்றுக்களை இந்தத் தீர்மானம் கவனத்தில் கொள்கிறது.

பல ஆண்டுகளாக சர்வதேச சட்டத்துக்கு அமைவாக சட்டம் திருத்தப்படும் என்று சிறிலங்கா பல உறுதிமொழிகளை அளித்துள்ளது. இன்றுவரை, போதுமான சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை என்பதையும் தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது.

தனிநபர்களை தன்னிச்சையாக கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும், கைதிகளை சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் பிற மோசமான சிகிச்சைக்கு உள்ளாக்குவதற்கும் ஒரு கருவியாக சிறிலங்கா பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகிறது என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை சிறிலங்கா எட்டியுள்ளது என்ற அறிவிப்பை தீர்மானம் வரவேற்றுள்ளது. நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் பெறுபவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்கள் உட்பட மிகவும் பின்தங்கிய தனிநபர்களின் உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது. (எ-இ)

## தொழில் தேடுவோரின் விவரங்கள் மாவட்ட செயலகத்தால் திரட்டல்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்டத்தில் புதிதாக சுயதொழில் ஆரம்பிக்க விரும்புவோர் மற்றும் தொழில் தேடுவோரைப் பதிவு செய்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள தொழில் தேடுவோர் மற்றும் புதிதாக சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வம் கொண்டிருப்போரை யாழ்.மாவட்ட செயலகம் பதிவு செய்யவுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளூடாகவும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை தங்கள் கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கிராம சேவையாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (சு-27)



வவுனியா மருத்துவமனையில் உள்ள குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டையடுத்து வவுனியா பிரதேச செயலகத்தால் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு, வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. (ஓ-14,18)

## ஈழத்தமிழருக்குச் சார்பாக மாறும் இந்திய நிலைப்பாடு

### ஜனநாயகப் போராளிகள் கட்சி வரவேற்பு

கொழும்பு, செப்.16

முன்னெப்போதும் இல்லாதவகையில் சிறிலங்கா மீது இந்தியா பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளது. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இதை வரவேற்கின்றோம்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதை நாங்கள் வரவேற்கின்றோம்.

மாகாண அதிகாரங்கள் தொடர்பிலும் இந்தியா தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. எதிர்காலத்திலும் எமது மக்களின் உரிமை தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் சர்வதேச ரீதியில் இவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என நாங்கள் இந்திய அரசாங்கத்திடம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தவற்றை அப்போதிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் வழங்காது ஏமாற்றியது. அப்போது மக்களின் பிரதிநிதி களாகிய விடுதலைப் புலிகள் அமைப்பின் அகிம்சைப் போராளி தியாகி திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அவரின் உண்ணாவிரதப் போராட்டம் இந்திய அரசுக்கு எதிரான போராட்டமாக சில சக்திகளால் திரிபுபடுத்தப்பட்டது. அது இந்திய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் அல்ல. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட அனைத்தும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே உணவு தவிர்ப்புப் போராட்டத்தை திலீபன் ஆரம்பித்தார்.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதை இந்தியா தற்போது வலியுறுத்தி நிற்கின்றது. தியாக தீபம் திலீபன் அவர்களின் கனவுகள், தியாகங்கள் என்றும் வீண் போகாது வெற்றி பெறவேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம். அவர் வழியில் எமது மக்களுக்காக நாங்கள் தொடர்ந்தும் ஜனநாயக ரீதியில் செயற்படுவோம் - என்றார். (எ-இ)

## இன்னும் பல அமைச்சர்கள் விரைவில் பதவி பிரமாணம்?

ஜனாதிபதியின் பிரிட்டன் மற்றும் ஜப்பான் பயணத்தின் பின்னர் புதிய அமைச்சரவை அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் இடம்பெறும் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் 10 அமைச்சுப் பதவிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரியுள்ளது என்றும், அதற்கமைய 10 அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

கொழும்பு, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களின் மாவட்டத் தலைவர்கள் இந்தப் பட்டியலில் உள்ளடங்குவதாக சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, ஜனாதிபதி மற்றும் பிரதமர் வகிக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு மேலதிகமாக 18 அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போதைய அரசாங்கத்தில் 38 இராஜாங்க அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. (எ-இ)

## முட்டைகளின் விலையை கட்டுப்படுத்தும் வர்த்தகர்

### ஒத்துழைக்காதோருக்கு கொலை அச்சுறுத்தலாம்

கொழும்பு, செப்.16



நாட்டில் முட்டை விலைகளை பிரபல வர்த்தகர் ஒருவரே கட்டுப்படுத்துகின்றார் என்றும், தனது நோக்கத்துக்காக அவர் தற்போதைய அமைச்சர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றார் என்றும் முட்டை உற்பத்தியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். முட்டை உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர் அதிகாரசபையினருக்கும் இடையே அண்மையில் நடந்த சந்திப்பின்போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வர்த்தகர் நாட்டின் முட்டை உற்பத்தியில் 30 வீதத்தை வழங்குகின்றார். நாட்டின் 70 வீத முட்டை உற்பத்திக்கு காரணமான கோழிப்பண்ணையாளர்கள் முட்டையின் விலையை குறைக்க முற்பட்டால் அந்த வர்த்தகரிடமிருந்து உயிர் அச்சுறுத்தலை எதிர்கொள்வார்கள்.

இவர் தேர்தலின் போது வேட்பாளர்கள் சிலரை தெரிவு செய்து அவர்களுக்கு நிதி வழங்குகின்றார். பின்னர் அவர்களைத் தனது நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றார் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முட்டை உற்பத்தியாளர் ஒருவருக்கு அந்த வர்த்தகர் உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் குரல் பதிவு ஒன்றையும் முட்டை உற்பத்தியாளர்கள் இந்த சந்திப்பின்போது வெளியிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தியாக தீபம் திலீபனுக்கு நல்லூரில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.16

**ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தி தமிழ் மக்களுக்காகத் தன் உயிரை தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.**

தியாக தீபம் தீலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த முற்பகல் 9.45 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாவீரர் பண்டிதரின் தாயாரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து, திலீபனின் உருவப் படத்துக்கு மாவீரர்களின் பெற்றோரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, முன்னதாக தியாக தீபம் தீலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த நல்லூர் வடக்கு வீதியில் மாவீரர் தமிழீழவனின் தாயாரால் ஈகைச் சுடரேற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது. (எ-20.27)

## வேலணை பிரதேசசபையில் திலீபனை நினைவுகூர ஈ.பி.டி.பி.யினர் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனை நினைவுகூருவதற்கு வேலணை பிரதேசசபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி.யினர் எதிர்ப்புத் தெரிவித்து சபையை ஒத்திவைத்துள்ளனர்.

தமிழ் மக்களுக்காக ஆகுதியாகிய தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஆரம்பமாகியது.

அதனையடுத்து வேலணை பிரதேசசபையின் மாதாந்த கூட்டம் நேற்று இடம்பெற்றபோது தியாகி திலீபனுக்கு நினைவஞ்சலி செலுத்தவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். எனினும், ஆளும் கட்சியினரான ஈ.பி.டி.பி.யினர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து சபையை ஒத்திவைத்தனர்.

அதேவேளை, வேலணை வங்களாவடிச்சந்தியில் பிரதேசசபைக்கு முன்பாக அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவுத்தூபியில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர். (ச-இ)

## தியாகி திலீபனுக்கு பல்கலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், செப்.16

தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள பிரதான தூபி வளாகத்தில் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டது.

பிரதான தூபியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. மாணவர்கள் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

எதிர்வரும் 26 ஆம் திகதிவரையில் தொடர்ச்சியாக நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-125)



## உர வகைகள் இல்லாமையால் நெற்செய்கை ஆரம்பிக்கவில்லை

### விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, செப்.16

உர வகைகள் இல்லாமையால் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பகட்டப் பணிகளை இன்னமும் ஆரம்பிக்கவில்லை - என்று சில விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். செப்ரெம்பர் மாதமாகியும் காலபோக நெற்செய்கைக்கான எந்தவொரு ஆரம்பப்பணிகளும் மேற்கொள்ளப்படாமல் பல வயல்கள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக விவசாயிகளுடன் தொடர்புகொண்ட போது விவசாயிகள் தெரிவித்ததாவது:-

உர வகைகள் இல்லாமையால் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பகட்டப் பணிகளை இன்னமும் ஆரம்பிக்கவில்லை. அத்துடன், எரிபொருள் விலை அதிகரிப்பால் வயல்கள் உழுவதற்கான வாகனக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. கடந்த வருடம் உர வகைகள் கிடைக்காத நிலையில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. இதுபோன்ற காரணங்களாலே இந்த வருட காலபோக நெற்செய்கைக்கான பணிகள் ஆரம்பிக்கவில்லை - என்றனர். (ஓ-14.9)

## நிர்ணய விலையை மீறி ம.எண்ணெய் விற்பனை

### இருவர் கைது!

நிர்ணய விலையை மீறி அதிக விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்த நபரும் அதைக் கொள்வனவு செய்த நபருமாக இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் 380 லீற்றர் மண்ணெண்ணெயை விற்பனை செய்தவரும் அதை வாங்கிய நபருமே பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

380 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 800 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது. இதன்போது பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத்தெரு பகுதியைச் சேர்ந்த நபரும் நாவற்குளி பகுதியை சேர்ந்தச் ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-14.26)

## மந்துவில் படுகொலை: 23 ஆம் ஆண்டு நினைவு

முல்லைத்தீவு, செப். 16

புதுக்குடியிருப்பு மந்துவில் சந்தை வளாகத்தில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுடைய 23 ஆம் ஆண்டு நினைவுதினம் மந்துவில் சந்தியிலுள்ள நினை விடத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. நினைவேந்தலில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பொது அமைப்புக்களை சேர்ந்தோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பிரச்சினைக்கு சில மாதங்களில் தீர்வு!

## ஜனாதிபதி நம்பிக்கை

**கொழும்பு, செப்.16**

**தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்காக தமிழ்க் கட்சிகளுடன பேச்சு நடத்தி இன்னும் ஒரு சில மாதங்களில் தீர்வு எட்டப்படும் என்று நம்புகின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொள்ளுப்பிட்டி தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை இராணுவ நடவடிக்கைகளில் ஒருபோதும் ஈடுபடாது. இலங்கையில் உள்ள அனைத்து துறைமுகங்களும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடன் முகாமைத்துவ செயற்பாடாக மாத்திரமே சீனாவுக்கு பங்குகள் உள்ளன -என்றார். (எ-இ)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், செப். 16

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வடலியடைப்பு பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடலியடைப்பு பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இளவாலை பொலிஸார், காயா வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரை வழிமறித்து சோதனைக்குட்படுத்தினர். அதன்போது குறித்த நபரிடமிருந்து 70 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஒருவரை இளவாலை பொலிஸார் கைதுசெய்தனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இளவாலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-14-125)

# கசூரினா கடற்கரைக்கான நுழைவுக்கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், செப். 16

காரைநகர் - கசூரினா கடற்கரைக்குச் செல்வதற்கான நுழைவுக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன என்று காரைநகர் பிரதேசசபை தெரிவித்துள்ளது.

காரைநகர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு, பிரதேசசபைத் தவிசாளர் கணபதிப்பிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அதன்போதே கசூரினா கடற்கரைக்குச் செல்வோருக்கான நுழைவுக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.

அதற்கமைய வெளிநாட்டு சுற்றுலாவிகளுக்கு 300 ரூபாவும், படப்பிடிப்புக்களுக்காக வருகை தருபவர்களுக்கு ஆயிரம் ரூபாவும் அறவீடு செய்யப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த முதலாம் திகதியிலிருந்து சைக்கிளுக்கு 30 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 50 ரூபாவும் கார், ஓட்டோக்களுக்கு 100 ரூபாவும் வான், மினிபஸ் ஆகியவற்றுக்கு 600 ரூபாவும் பேருந்துக்கு ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.

அத்துடன் வாகனங்களில் வரும் பெரியவர்களுக்கு 20 ரூபாவும் சிறியவர்களுக்கு 10 ரூபாவுமாக அனைத்து நுழைவுக்கட்டணங்களும் மாற்றப்பட்டுள்ளன. (ஒ-14-125)

# தேர்தல் சட்ட மறுசீரமைப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்.மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தால் உத்தேச தேர்தல் சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

தேர்தல்கள் சட்ட மறுசீரமைப்புகள் குறித்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் சட்ட மறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளை துரிதமாக சட்டமாக்குவதற்குத் தேவையான சமூகப் பின்புலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைய யாழ்.மாவட்டத்திலும் உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்மொழிவுகளை முறையாக நடைமுறைப்படுத்தி தேர்தல். ஆணைக்குழுவின் செயன்முறைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் அரச அலுவலர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# ஓட்டோக்களுக்கு எரிபொருளை அதிகரித்து வழங்க கோரிக்கை



யாழ்ப்பாணம் மாவட்ட மோட்டார் ஊர்திச் சங்க அங்கத்துவமுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு வாரத்துக்கு 15 லீற்றர் எரிபொருள் வழங்கினால் பயணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட மோட்டார் ஊர்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த மாதங்களில் முச்சக்கர வண்டிச் சாரதிகள் வெளியே அதிக விலை கொடுத்து எரிபொருள் பெற்றுக் கொண்டமையால் பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

தற்போது முச்சக்கர வண்டிகளுக்கு வாரத்துக்கு 5 லீற்றர் எரிபொருள் வழங்கப்படுகின்றது. எமது முச்சக்கர வண்டிச் சாரதிகள் இது போதாது எனவும், எரிபொருளை அதிகரித்துப் பெற்றுக்கொள்வதற்கு யாழ்.மாவட்ட மோட்டார் ஊர்தி சங்க நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என குறைபட்டுக் கொள்கின்றனர்.

யாழ்.மாவட்ட மோட்டார் ஊர்தி சங்க அங்கத்துவ முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு எரிபொருளை அதிகரித்துப் பெற இரு தடவை யாழ். பிரதேச செயலகத்துடனும், 3 தடவைகள் யாழ். மாவட்டச் செயலகத்துடனும் கலந்துரையாடியது. அதன்போது எரிபொருளை அதிகரித்து வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அது இன்னும் சாத்தியமாகவில்லை. எனவே, யாழ். மாவட்ட மோட்டார் ஊர்தி சங்க அங்கத்துவமுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு வாரத்தில் 15 லீற்றர் எரிபொருள் வழங்கினால் பயணிகளுக்கும் சிறந்த சேவையாற்ற முடியும். எனவே, உரிய அதிகாரிகள் எமது வேண்டுகோளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



### நீர்வேலி மேய்ச்சல் தரவையில்

# மலக்கழிவுகள் கொட்டுவதால் நீர் நிலை பாதிக்கும் அபாயம்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 16

புத்தூர் பிரதேசசபைக்குட்பட்ட நீர்வேலி மேய்ச்சல் தரவைப் பகுதியில் முறையற்ற விதத்தில் மலக்கழிவுகள் கொட்டப்பட்டதால், அப்பகுதியை சூழவுள்ள நீர்நிலைகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வீடுகள் மற்றும் நிறுவனங்களில் சேகரிக்கப்பட்ட மலக்கழிவுகளை புத்தூர் பிரதேசசபை வாகனம், கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபடும் நீர்வேலி தரவைப் பகுதியில் கொட்டும் நடவடிக்கையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஈடுபட்டது.

அதையறிந்து மேய்ச்சல் தரவைக்குச் சென்ற அந்தப்பகுதி விவசாயிகளுக்கும் மலக்கழிவைக் கொட்டுவதற்கு வந்தவர்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அதன்போது அந்தப்பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

மலக்கழிவுகளை கொட்டுவதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்படாமல் கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபடும் பகுதியில் கொட்டப்படுவதை ஏற்க முடியாது. கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக குறித்த பிரதேசம் காணப்படுவதுடன், கால்நடைகள் தண்ணீர் குடிக்கும் பிரதேசங்களும் அருகில் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் பொறுப்பற்ற முறையில் மலக்கழிவுகளை கொட்டுவதால் மழை காலங்களில் மழை நீருடன் மலக்கழிவுகள் கலந்து கிணறுகள் மற்றும் நன்னீர் நிலைகளுடன் கலக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட பிரதேசசபை அதிகாரிகள் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ஒ-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தல்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு வரவுள்ளதாகத் தெரியவருகின்றது. தீர்மான வரைவு உறுப்பு நாடுகளின் பார்வைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் கடந்த காலங்களைப்போன்று இலங்கை அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையை ஊக்குவிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. தமிழர் தரப்பு அன்று தொடக்கம் இன்று வரைகோரிநிற்கும், பாதுகாப்புச்சபைக்கு பாரப்படுத்தல் விடயம் (பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லல்) உள்ளடக்கப்படவில்லை.

''மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து சிறிலங்கா அரசாங்கமும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்படவேண்டும்'' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்தையோ அதன் படைகளையோ தண்டிக்கவேண்டுமாக இருந்தால், இலங்கை விவகாரம் தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தளத்தில் வைத்திருக்கப்படுவதில் எந்த அர்த்தமுமில்லை.

கடந்த 10 ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையில் இலங்கைதொடர்பில்தீர்மானங்கள்நிறைவேற்றப்படுவதும், கால அவகாசங்கள் வழங்கப்படுவதும் என்று ஏமாற்றும் போக்கே தொடர்ந்து செல்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்திருந்தாலும் அவரோ, அல்லது இந்த விடயங்களை அவரது கட்சியிலிருந்து கையாளும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனோ, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள உப்புச்சப்பற்ற இலங்கையின் உள்ளகப் பொறிமுறையை ஊக்குவிக்கும் தீர்மானத்தை நிராகரிக்கப் போவதில்லை. மாறாக அதனை ஆதரிக்கவேண்டும் என்றே குரல் கொடுக்கப் போகின்றனர். இதுதான் தமிழ் மக்களுக்கு ஆபத்து.

பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். அவர்களின் பெயரால், மேற்குலகநாடுகள் தங்களின் விருப்பங்களை நிறைவேற்றவேண்டுமானால் அதைத் தாராளமாக நிறைவேற்றிவிட்டுப்போகட்டும். ஆனால், அதை தமிழர்கள் ஆதரிக்கக் கூடாது. தமிழர்கள் ஆதரித்தால் அதையே சாட்டாக வைத்து இலங்கை அரசாங்கத்துக்கான வாய்ப்புக்களை, அவகாசங்களை இன்னமும் வழங்கிக் கொண்டே, இப்படியே இன்னும் பல வருடங்கள் இழுத்தடித்துக் கொண்டிருப்பார்கள்.

போர் முடிந்த சூழலில், எதுவும் செய்வதறியாது நின்றிருந்த காலத்தில் ஒரு பிடிமானமாக ஐ.நா. தீர்மானம் இருந்தது உண்மைதான். ஆனாலும், கடந்த 10 ஆண்டுகளாக அதிலேயே தொங்கிக் கொண்டிருப்பதால் எதுவும் நடக்காது. அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கு, முதலில் பாதுகாப்புச்சபைக்கு பாரப்படுத்த வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஊடாக ஒரு நாட்டைத் தண்டிக்க முடியாது. அழுத்தங்களை மாத்திரமே பிரயோகிக்கமுடியும். அந்த அழுத்தங்களால் எந்த மாற்றமும் வராத சூழலில், விடயத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்குத்தான் தமிழ் தலைமைகள் சிந்திக்கவேண்டும்.


வெறுமனே, மேற்குலக நாடுகள் இலங்கை அரசாங்கத்தை கையாள்வதற்கு ஒரு பிடிமானமாக தமிழர் தரப்பு விடயங்களை எடுத்துக்கொள்வதற்கு நாமே ஒத்தூதிகளாக இருக்கக் கூடாது.

ஜெனிவா அமர்வு ஆரம்பமாக முன்னர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்கு முன்வைக்கவேண்டும் என்று கூறியிருந்தார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரைவை தயாரிப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தொடர்புபட்டிருந்தார். மேற்படி கோரிக்கையை முன்வைத்தவர் அதனை ஏன் வரைவில் உள்ளடக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

வெறுமனே மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்துவதற்கு தமிழ் மக்களின் பெயரால் செயற்படுவது அபத்தமானது. இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபைக்கு பாரப்படுத்தும் வகையிலான வாசகத்தை உள்ளடக்காமல் முன்வைக்கப்படும் தீர்மானத்தை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்கவேண்டும். அப்படியொரு உப்புச்சப்பற்ற – உள்ளகப் பொறிமுறையை ஊக்குவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் தமிழ் தரப்புக்களை தூக்கியெறியவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

“எப்படி உடற்பயிற்சி உடலுக்கு அவசியமானதோ அதுபோல வாசிப்பு மனதுக்கு அவசியம்” - **ஜோசப் அடிசன்**



# இந்தியாவின் ஆதரவு கிட்டினால் ஐ.நா.வில் சிறிலங்காவுக்கு வெற்றி

## மஹாநாமஹேவா தெரிவிப்பு



**கொழும்பு, செப்.16**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா இந்தியாவின் ஆதரவை வெல்லும் பட்சத்தில் மேலும் 10 நாடுகள் சிறிலங்காவின் பக்கம் சாயும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், அரசியல் ஆய்வாளருமான பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது: சிறிலங்கா தொடர்பான பிரேரணை ஒக்ரோபர் 7 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும். 47 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கும். இதில் 23 அல்லது 24 நாடுகளின் ஆதரவைத் திரட்டினால், பிரேரணையை சிறிலங்காவால் தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும்.

சிறிலங்கா வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஆதரவு மிக முக்கியம். சிறிலங்காவுக்குச் சார்பாக இந்தியா வாக்களித்தால் மேற்குலகம், ஆபிரிக்கா, கரீபியன் தீவுகளில் உள்ள சுமார் 10 நாடுகள் சிறிலங்காவுக்கு நேசக்கரம் நீட்டும். இந்தியா நடுநிலை வகித்தால், பிரேரணை நிறைவேறும். சிறிலங்கா உள்ளகப் பொறிமுறை யோசனையை முன்வைக்க வேண்டும். 10 ஆண்டு கால மனித உரிமை திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார்.

(எ-44)

# தேசத்துரோகிகளின் புகலிடமாம் ஐ.நா.சபை

## கொதிக்கிறார் விமல்



கொழும்பு, செப்.16

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது தேசத்துரோகிகளின் புகலிடம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் பற்றி கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையென்பது அமெரிக்காவின் ஒரு கருவியாகும். தமது நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் செல்லும் நாடுகளை தண்டிப்பதற்காகவே இந்தக் கருவி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையானது பிரிவினை வாதத்தைத் தோற்கடித்து, அவர்களின் (அமெரிக்காவின்) உபாய மார்க்கத்திலிருந்துவெளியேவந்ததால்தான் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. எதிரணிகள் ஜெனிவா சென்றுள்ளன. தேசத்துரோகிகளின் இருப்பிடம்தான் ஜெனிவாவாகும் - என்றார். (எ-44)

நாளை
17.09.2022
சனிக்கிழமை
ஆவணி 32


சுபநேரம் : 03.03 - 04.33
ராகுகாலம்: 09.03 - 10.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனுடன் இரண்டாம் நாள்...

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்



16.09.1987
அதிகாலை 5 மணிக்கே திலீபன் உறக்கத்தை விட்டு எழுந்துவிட்டார். முகம் கழுவித் தலைவாரிக் கொண்டார். சிறுநீர் கழித்தார், ஆனால், மலம் இன்னும் போகவில்லை. அவர் முகம் சோர்வாகக் காணப்பட்டாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் எல்லோருடனும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். சகல தினசரிப் பத்திரிகைகளையும் ஒன்றுவிடாமல் படித்து முடித்தார். பத்து மணியளவில் பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. நிகழ்ச்சிகளுக்குத் தேவர் தலைமைதாங்கிக் கொண்டிருந்தார். கவிதைகளை படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்துத் தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தனர். "நிதர்சனம்" ஒளிபரப்பாளர்களின் வீடியோ கமெரா, நாலாபக்கங்களிலும் சுழன்று படம் பிடித்துக் கொண்டிருந்தது. மேடையில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்தபோது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். "நான் பேசப்போகின்றேன் மைக்கை வாங்கித் தாருங்கோ வாஞ்சியண்ணை..." "சாப்பிடாமல் குடிக்காமல் இருக்கிறீங்கள், களைத்து விடுவீங்கள்..." என்று அவரைத் தடுக்க முயன்றேன். "இரண்டு நிமிசம் மட்டும் நிற்பாட்டி விடுவேன் பிளீஸ்... மைக்கை வாங்கித் தாங்கோ ..." என்று குரல் தளதளக்கக் கூறினார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கண்கள் குழிவிழுந்து முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்தப் பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறாமல் அப்படியே இருந்தது. இரண்டு நிமிடத்துக்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கைப் பெற்று கொடுக்கிறேன். திலீபன் பேசப்போவதை தேவர் ஒலிபெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. திலீபன் பேசுகிறார்...! "எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்றுகொண்டு பேசமுடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகின்றேன்.

நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ? என்று தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேச விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். 650 பேர் இன்றுவரை மரணித்துள்ளோம். மில்லர் இறுதியாகப் போகும்போது என்னிடம் ஒருவரி கூறினான். நான் அவனுடன் இறுதிவரை இருந்தேன் "நான் எனது தாய்நாட்டிற்காக உயிர்துறப்பதை எண்ணும்போது மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்ணால் காணமுடியாது என்பதே ஒரே ஏக்கம்" என்று கூறிவிட்டு வெடிமருந்து நிரப்பிய லொறியை எடுத்துச் சென்றான்.

இறந்த 650 பேரும் அநேகமாக எனக்குத் தெரிந்துதான் மரணித்தார்கள். அதனை நான் மறக்கமாட்டேன். உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கத் தலைவரின் அனுமதியைக் கேட்டேன், அப்போது தலைவர் கூறிய வரிகள் எனது நினைவில் உள்ளன. "திலீபன்! நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன்" என்று அவர் கூறினார். அத்தகைய ஒரு தெளிவான தலைவனை, தனது உயிரைச் சிறிது கூட மதிக்காத தலைவனை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கும். அது நிச்சயம் தமிழீழத்தை, தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரும். இதனை வானத்தில் இருந்து பார்த்து மகிழ்வேன். நான் மனரீதியாக, ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடன் பூரண திருப்தியுடன் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரிலும் மேலாக சிறுவர்களை சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக்கின்றார்கள். உண்மையான, உறுதியான இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது விருப்பமும் இதுதான்" மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமாகப் பேசிய அவரின் பேச்சைக் கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர்.

அன்றிரவு தலைவர் வந்து திலீபனைப் பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை அவர் தன் கரங்களால் வருடினார். ஒரு தகப்பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாகக் குழைத்தது போன்றிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக்கொண்டிருந்தன. இரவு 12 மணிக்குத் திலீபன் உறங்கத் தொடங்கினார்.

நானும் அவர் அருகிலேயே படுத்துவிட்டேன்.

திலீபனின் வீட்டிலே ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டி தாட்டிருந்தார்கள். திலீபனும் நண்பர்களும் அந்தக் கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப்புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர்நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர்களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு அந்த எலும்புக்கூட்டை அன்றே எடுத்துச் சென்று பொருட்காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பிவைக்கும்படி அவர் கூறினார் போலும்? ■

# ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலிப்பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நவாலிப் பகுதியில் இளைஞர்கள் ஹெரோய்னை உடைமையில் வைத்திருக்கின்றனர் என்று மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அதன்போது இளைஞர்களிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோய்னை மானிப்பாய் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் வட்டுக்கோட்டை மற்றும் பலாலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த மானிப்பாய் பொலிஸார் இளைஞர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஒ-14-125)



தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் 'பசுமையான தேசம்' எனும் இலக்கை நோக்கி மரக்கன்றுகளை நாட்டி செயற்பட்டமையை கௌரவித்து கிறின் லேயர் எனும் அமைப்பால் 'பசுமைப் புரவலர்' எனும் விருது அண்மையில் வழங்கப்பட்டது. (ய-9)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் செயல்களில் எதிர்பார்த்த நன்மை அடைய முடிய தாமதம் ஏற்படும். உங்கள் கவனக் குறைவால் பணிகளில் தடுமாற்றம் ஏற்படும். நிதானத்துடன் செயற்படுக.

**இடபம்:** அரசு வழியிலான முயற்சி லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் நிதி நிலை உயரும்.

**மிதுனம்:** மாலைவரை பணியிடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். திடீர் செலவுகள் அதிகரிக்கும். வரவுகள் ஒரு பக்கம் வந்தாலும் செலவுகள் மறுபக்கம் தயாராக இருக்கும்.

**கடகம்:** தொழிலில் இருந்த மந்த நிலை சரியாகும். உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும். புதிய திட்டங்கள் தீட்டி செயற்படுவீர்கள். முயற்சி பலிதமாகும்.

**சிம்மம்:** நேற்று வரை இருந்த சங்கடமான நிலை மாறும். உற்சாகமாக செயற்படுவீர்கள். நீங்கள் நினைத்திருந்த ஒரு செயலை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும்.

**கன்னி:** மற்றவரை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். எதிர்பார்த்த செயல்களில் பின்னடைவும் மறைமுக எதிர்ப்பும் உண்டாகும்.

**துலாம்:** மாலைக்குள் நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இன்று மாலை சந்திராஷ்டமம் தொடங்குவதால் செய்யும் செயல்களில் நிதானம் அவசியம்.

**விருச்சிகம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்சினையை சரி செய்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**தனுசு:** செயல்களில் தடைகளை சந்திப்பீர்கள். சிந்தித்து செயற்படுவதால் நன்மை அதிகரிக்கும். கடும் முயற்சிக்குப்பின் உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்:** உங்கள் மனம் விரும்பும் வகையில் செயற்படுவீர்கள். அரசு வழியில் நன்மை காண்பீர்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்:** திட்டமிட்டு செயற்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தடைப்பட்டிருந்த செயல் நிறைவேறும்.

**மீனம்:** குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சரி செய்வீர்கள். உங்கள் வருமானம் உயரும். வார்த்தைகளில் கவனம் தேவை. பணியிடத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா அடைவு கடை

**பதிவு இல : J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2021 ஆம் ஆண்டு 30.09.2021 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2022 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி (20.10.2022) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் (20.10.2022) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறிய தருகின்றோம்.

குறிப்பு: 2021 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 30ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

(CS 20777) (3/6)

**இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311, 021 222 5180**

**உரிமையாளர் இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5046**

## மாகாண விவசாயத்திணைக்களம், வட மாகாணம்

# கால்நடைகள் ஏல விற்பனை

மாகாண விவசாயத்திணைக்களத்தின் கீழியங்கும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணைகளிலுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கால் நடைகள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்களில் அவற்றுக் கெதிராக குறிப்பிட்டுள்ள திகதிகளில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

| மாவட்டம் | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி, நேரம் | கால்நடைகளைப் பார்வையிடும் திகதி, நேரம் |
|---|---|---|---|
| மன்னார் | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், உயிலங்குளம், மன்னார் | 27.09.2022, மு.ப.10.00 | 26.09.2022 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| யாழ்ப்பாணம் | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | 28.09.2022, மு.ப.10.00 | 27.09.2022 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| வவுனியா | அரச விதை உற்பத்திப்பண்ணை, வவுனியா | 29.09.2022, மு.ப.10.00 | 28.09.2022 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |

**மன்னார் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம் – கால்நடைகள் விபரம்**

| தொ. இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | MN/DATC/LS/06/G | மறி ஆடு | ஜமுனாபாரி | 4 வருடம் |
| 2 | MN/DATC/LS/23/G | கடா ஆடு | ஜமுனாபாரி | 2 வருடம் |
| 3 | MN/DATC/LS/07/G | கடா ஆடு | ஜமுனாபாரி | 6 வருடம் |
| 4 | MN/DATC/LS/05/G | மறி ஆடு | ஜமுனாபாரி | 4 வருடம் |

**வவுனியா அரச விதை உற்பத்திப்பண்ணை – கால்நடைகள் விபரம்**

| தொ. இல | கால்நடை அடையாள இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 4309/0014 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 07 வருடம் |
| 2 | 4309/0017 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 06 வருடம் |
| 3 | 4309/0018 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 06 வருடம் |
| 4 | 4309/0020 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 04 வருடம் |
| 5 | 4309/0023 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 3 ½ வருடம் |
| 6 | 4309/0025 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 3 ½ வருடம் |

**யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – கால்நடைகள் விபரம்**

| தொ. இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 0540 0030 | நாம்பன் மாடு | ஜேர்சி கலப்பு | 2 வருடம் 1 மாதம் |
| 2 | Pig/Re/01/14/08 | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 8 வருடம் 3 மாதம் |
| 3 | Rabbit/Re/01/34 - Rabbit/Re/01/54 | முயல்கள் - 21 எண்ணிக்கை | உள்ளூர் | 1 மாதம் முதல் 1 வருடம் வரையான வயதுள்ளவை |

ஏலவிற்பனைகளில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் உரிய நேரத்தில் கால்நடைகளைப்பார்வையிட்டு குறித்த தினங்களில் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியும். ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால் நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால் நடைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

**மாகாண விவசாயப்பணிப்பாளர்**

(CR 38091) (3/6)

**வீடியோ & போட்டோ**

**நேரடி ஒளிபரப்பு**

உங்கள் மகிழ்வான தருணங்களை **விசேட விலைக்கழிவுடன்** உடனுக்குடன் பெற்றிட அழையுங்கள்!

**செந்தமிழன் STUDIO 077 6405572**

# பல்வேறு இடங்களில் சைக்கிள்கள் திருட்டு

## 4 சந்தேகநபர்கள் கைது 9 சைக்கிள்கள் மீட்பு

வவுனியா, செப். 16

வவுனியாவில் பல்வேறு இடங்களில் சைக்கிள்கள் திருடிய குற்றச்சாட்டில் 4 சந்தேகநபர்கள் நேற்று கைதுசெய்யப் பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மருத்துவமனை மற்றும் நகர்ப்பகுதிககளில் நிறுத்தி வைக்கப் பட்ட சைக்கிள்கள் திருட்டுப்போயுள்ளன என மக்களால் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன.

அதற்கமைவாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 4 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 9 சைக்கிள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-110)

சிவமயம்

**திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேக மலர் - 2022**

திருக்கேதீச்சர ஆலயத்தில் கருங்கல் திருப்பணி வேலைகள் முடிவடைந்ததையொட்டி நிகழ்ந்த மகா கும்பாபிஷேகப் பெருவிழாவினை முன்னிட்டு வெளியிடப் பட்ட, ஆலய வரலாற்றுப் பெருமையினை எடுத்தியம்பும் **"கேதீச்சர தேனமுதம்"** எனும் கும்பாபிஷேக மலரினை அடியார்கள் தற்போது பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சரஸ்வதி மண்டபம்**
75, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி
**தொ.பே: 011 258 5975**

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
211/ 17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
**தொ.பே: 021 222 1075**

**திருக்கேதீச்சர ஆலய காரியாலயம்**
திருக்கேதீச்சரம்
**தொ.பே: 023 205 0800**

(CR 38088) (3/6)

**வெள்ளி விழாக் காணும் இனிய வாழ்வு இல்லம்**

**தேவிபுரம், புதுக்குடியிருப்பு**

**ஸ்தாபகர் அமரர்**

**கிறிஸ்தோபர் - மாசிலாமணி**

அவர்களின் உயரிய சிந்தனையின் வடிவமாக **19.09.1997** இல் ஆரம்பிக்கப்பட்ட **இனிய வாழ்வு இல்லம்** 2022 ஆம் ஆண்டை வெள்ளிவிழாக் காலமாக பிரகடனம் செய்துள்ளது இக்காலங்களில்

- மாணவர் சாதனைப் பகுப்பாய்வு
- மாணவர் போசாக்கு மதிப்பீடு
- தொழில்சார் கற்கை நெறிகளும் மதிப்பீடும்
- ஆய்வு அரங்கம்
- கலை விழா
- மலர்வெளியீடு
- பழைய மாணவர்களது பட்டி மன்றம்

என்றும் யாவும் தேடல் செய்து புதிய திட்டமிடலுக்கு வழிசெய்வோம். மாற்றுத்திறனுடைய மாணவர் திறன்களுக்கு மேடை அமைப்போம். அவர்களுக்கு மதிப்பளிப்போம். உரிய உரிய வேளைகளில் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிறைவேற்றுச் செயலணி,
இனிய வாழ்வு இல்லம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) கடந்த (13.09.2022) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் **சட்டமாணிப் பட்டத்தை** (LLB) பெற்றுக்கொண்ட

**சின்னையா பாலமுருகன்**

ஆசிரியர்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
(BBA, B.Com, Dip. in Ed, M.Ed,LLB)
அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**சின்னையா குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
uthayan--05.07.2022

# எதிர்வரும் மார்ச் மாதத்தில் கட்டாயம் தேர்தல் நடக்கும்!

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் திட்டவட்டம்

**கொழும்பு, செப்.16**

**அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் கட்டாயம் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சி ஹேவா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏற்கனவே ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் -என்றார். (எ-இ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 16

களனி பட்டிய சந்தி பகுதியில் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் களனி பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## மருந்துகள் பற்றாக்குறை:

# வழமையான அறுவை சிகிச்சைகள் மருத்துவமனைகளில் பிற்போடப்படும்

கொழும்பு, செப். 16

எதிர்வரும் நாள்களில் அவசர அறுவைசிகிச்சைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை சேமிப்பதற்காக வழமையான அறுவைச் சிகிச்சைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்ததாவது:-

தற்போது மருத்துவ உபகரணங்களுக்கு மீண்டும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எஞ்சியிருக்கின்ற மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் இருதய அறுவை சிகிச்சை போன்ற உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகளுக்காக சேமிக்கவேண்டியுள்ளது.

மயக்கமருந்து தொடர்புடைய மருத்துவ உபகரணங்கள் மற்றும் அன்டியயோட்டிக்ஸ் உள்ளிட்டவற்றுக்கு பற்றாக்குறை காணப்படுவதால் வழக்கமான மருத்துவ நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுகின்றது.

ஆறுமாதங்களுக்கு முன்னரே இந்த வழமையான அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவர்கள் அனுமதி வழங்கிவிட்டனர்.

எனினும், அவசர அறுவைச்சிகிச்சைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைசேமிப்பதற்காக அவர்களுக்கு அறுவைச்சிகிச்சைகளை மேற்கொள்ளாமல் மருத்துவமனைகள் திருப்பி அனுப்பிவிடுகின்றன.

வரவு - செலவுத் திட்டத்தில் புற்றுநோய் மருந்துகளுக்கு நிதியொதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுமா என்பது கேள்வியே -என்றார். (ச-இ)

காரைநகர் பிரதேசத்தில்

# ஜி.பி.எஸ். செயலி ஊடாக குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 16


காரைநகர் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை திறன்பட முன்னெடுப்பதற்காக ஜி.பி. எஸ். செயலியை குடிதண்ணீர் விநியோக வாகனங்களில் பொருத்துவதற்கு, காரைநகர் பிரதேசசபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது,

காரைநகர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு, சபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைத்த சபையின் தவிசாளர், எமது பிரதேச மக்களுக்கு தண்ணீர் விநியோகத்தை குறித்த நேர அட்டவணையில் குறித்த காலத்தில் மேற்கொள்வதற்கும், ஊழியர்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் முகமாகவும் குடிதண்ணீர் விநியோக வாகனங்களில் ஜி.பி.எஸ். செயலியை பொருத்துவது சிறந்தது என்ற தீர்மானத்தை முன் வைத்தார்.

குறித்த தீர்மானத்துக்கு சபையின் உறுப்பினர்கள் ஒருமித்ததாக ஆதரவளித்த நிலையில், தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ஒ-14-125)




## முகாமைத்துவ உதவியாளர் தேவை (பெண்)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளிக்கு முகாமைத்துவ உதவியாளர் (பெண்) வெற்றிடம் உண்டு. உயர்தர பரீட்சையில் கணக்கியல் பாடத்துறையினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**0212216933, 0773867458**


## 14 ஆம் ஆண்டில் நீங்கா நினைவுகள்

தோற்றம் 15 . 02 . 1939



மறைவு 22 . 08 . 2008

### திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி

**திதி: ஸஷ்டி (16.09.2022)**


ஆண்டுகள் பல நகர்ந்தாலும்
எமை விட்டகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகளின் வருகையால்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா!
நின்றனை நினைக்காத நொடிகளில்லை
உயிர் ஓவியமாய் எம்முள்
நிலைத்துள்ளீர்கள் அம்மா!

கௌரிகோட்டம்,
அல்வாய்.

நெஞ்சில் வலியுடனும்
நீங்காத நினைவுகளுடனும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 01 . 1967



இறப்பு 13 . 09 . 2022

### நாகராசா ஆனந்தரூபன்

முகமாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல.112, செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா ஆனந்தரூபன் கடந்த (13.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகராசா - சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், சுந்தரலிங்கம் - அம்பிகாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகந்தா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆனந்தரவி, ஆனந்தமோகன், ஆனந்தரகு, தவமணி, தவமதி, தவநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவாகரன், சிந்துஜா, புவிகரன், லதீபன், பிரதீபன், தனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.112, செல்லர் வீதி,
கல்வியங்காடு,
நல்லூர்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 790 2959**

(cs20778) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபைக் கட்டடத் தொகுதி நிதியை அதிகரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.16

**யாழ்ப்பாணம் மாநகரசபைக்கான புதிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான நிதி உதவியை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி முதல்வர் து.ஈசன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்கு தற்போது யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு 800 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. தற்போதைய கட்டட மூலப்பொருள் விலையேற்றத்துக்கு அமைய நிதி ஒதுக்கீடு செய்வது அவசியமானது.

இந்தத் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்வதில் தங்கள் விசேட கவனத்தைச் செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என்று அந்தக் கடிதத்தில் பிரதி முதல்வர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# சுகாதார சேவைகள் தொடர்பில் மக்கள் தொடர்புகொள்ளலாம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் தொடர்பில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகள், கருத்துக்களை தன்னுடைய அலைபேசி இலக்கமான +94 (77) 386 8579 என்ற இலக்கத்துக்கு அல்லது குறித்த இலக்கத்தின் வட்ஸ்அப், வைபர், ரெலிகிராம், சிக்னல் மூலம் தொடர்புகொள்ளவோ, அல்லது தகவல்களை அனுப்பவோ முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் திலிப் லியனகே தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும், பொதுமக்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறுந்தகவல் அல்லது அழைப்பை ஏற்படுத்தி கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-14-113)

# உக்கக்கூடிய கழிவுகளை நெற்செய்கைக்கு வழங்குக

## விவசாயிகள் கோரிக்கை

சாவகச்சேரி, செப்.16

சாவகச்சேரி நகரசபையால் குவித்து வைக்கப்பட்டுள்ள உக்கக்கூடிய கழிவுகளை காலபோக நெற்செய்கைக்கு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நகரசபையால் தினமும் சேகரிக்கப்படும் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு உக்கக்கூடிய கழிவுகள் கண்ணாடிப்பிட்டிப் பகுதியில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை தமது காலபோக நெற்செய்கைக்கு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக நகரசபையுடன் தொடர்பு கொண்டபோது, சேகரித்து வைக்கப்பட்டுள்ள கழிவுகள் வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட முள்ளியிலுள்ள பசளையாக்கும் திட்டத்துக்கு வழங்கவென குவிக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக கழிவுகளை அங்கு வழங்க முடியாதுள்ளது எனத் தெரிவித்தனர். (ஒ-14-9)



# 2ஆம் கட்ட எரிபொருளின்றி விவசாயிகள் ஏமாற்றம்

சாவகச்சேரி, செப். 16

காலபோக நெற்செய்கையின் ஆரம்பக் கட்டப் பணிகளுக்கு இரண்டாம் கட்ட எரிபொருள் தீர்ந்துவிட்டது என அறிவிக்கப்பட்டுள்ளமையால் தென்மராட்சி விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி கமநல சேவைகள் நிலையத்தால் கடந்த திங்கட்கிழமை விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

எனினும், மறுநாள் எரிபொருளைப் பெறச் சென்ற விவசாயிகளிடம் எரிபொருள் விநியோகம் முடிந்துவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரதீவு அறுகுவெளி, தனங்களப்பு, மறவன்புலவு, மட்டுவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே இவ்வாறு எரிபொருள் கிடைக்கப் பெறாது ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். (ச-9)

# கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 16

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டுப்போயுள்ளன என உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போத ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி மூடை, பால்மா பெட்டிகள், கோதுமை மா, எண்ணெய் பிஸ்கட் உள்ளிட்ட பொருள்கள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 16

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உயர்தரப்பிரிவு 2024 ஆம் ஆண்டு மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன், கல்லூரி விடுதியில் இருந்து கற்க விரும்பும் மாணவர்களும் அனுமதியைப் பெறலாம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள கல்லூரி அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-14)

# தீயணைப்பு வாகனங்கள் பழுது இதுவரை மாற்று ஒழுங்கில்லை

யாழ்.மாநகரசபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்களும் செயலிழந்துள்ள நிலையில் மாற்று ஒழுங்கு தொடர்பில் தமக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை என யாழ். மாநகர தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்.மாநகரசபைக்குரிய தீயணைப்பு வாகனம் ஒன்று கடந்த 2020ஆம் ஆண்டு விபத்துக்குள்ளான நிலையில் இதுவரை திருத்த நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

மற்றைய தீயணைப்பு வாகனம் பழுதடைந்த நிலையில் யாழ். மாநகர வளாகத்துக்குள் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதுகுறித்து யாழ். மாநகர பதில் முதல்வர் து.ஈசன், மாநகர தீயணைப்பு



வாகனம் அவசர திருத்த வேலைகள் இருப்பதன் காரணமாக ஒரு வாரத்துக்கு செயற்படாது என அறிவித்திருந்தார்.

தற்போது ஒருவாரம் நிறைவடைந்துள்ளது. எனினும், மாற்று ஒழுங்கு தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை என யாழ். மாநகர தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-20)

# சீரடி சாயி வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், செப். 16

நல்லூர் ஈழத்து சீரடி சாயி நாதர் வருடாந்தப் பெருந்திருவிழா, எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஒ-14)

# கொடுப்பனவுகள் இம்முறை தாமதம்

சாவகச்சேரி செப்.15

பிரதேசசெயலக சமூக சேவைகள் அலகுகளால் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த முதியோர், விசேட தேவையுடையோர், வேறு நோய்களையுடையோர் ஆகியோருக்கான இந்த மாதக் கொடுப்பனவு தாமதமடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவுகள் யாவும் இதுவரை காலமும் பிரதேச சமூக சேவைகள் அலகால் ஒவ்வொரு மாதமும் பிரதி 15 ஆம் திகதி தொடக்கம் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் கொடுப்பனவுகள் யாவற்றையும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் சமுர்த்தி வங்கிகளில் வழங்க வேண்டும் என்று முதியவர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் விசேட தேவையுடையோருக்கான தேசிய செயலகம் ஆகியவை அறிவித்தன.

அத்துடன் கொடுப்பனவுகளைப் பெறுவோர் சமுர்த்தி வங்கிகளில் கணக்கை ஆரம்பித்து கணக்கு இலக்கத்தை பிரதேசசெயலக சமூக சேவைகள் அலகில் ஒப்படைக்குமாறும் அறிவித்திருந்தனர். எனினும் சிலர் இதுவரை சமுர்த்தி வங்கிக்கணக்கு இலக்கங்களைக் கையளிக்கவில்லை. இதனால் செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவு வழங்குவது தாமதமடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

uthayan--05.07.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவேந்தல்களை...

கிறேன். அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன் என்று கோரியுள்ளார் விடுதலைப் புலிகளின் மூத்த (முன்னாள்) போரர்ளியான முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா).

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நல்லூரில் நேற்று ஆரம்பமாகின. இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் அணிக்கும், மணிவண்ணன் அணியினருக்கும் இடையில் நேற்றும் குழப்பங்கள் ஏற்பட்டன. இதையடுத்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே பஷீர் காக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் பிறிதொரு அணியினரைச் சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகிறது. நேற்று (நேற்றுமுன்தினம்) இவர் சார்ந்த கட்சியைச் சேர்ந்தவரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன் மாஸ்டரிடம் 'இந்த நிகழ்வை பொதுநிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்ன?' என்று கேட்டேன். 'எதுவும் இல்லை' என பதிலளித்தார். அது திருப்தி அளித்தது. அந்த நம்பிக்கையை சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி க.சுகாஷ் இன்றையதினம் (நேற்று) நடந்து கொண்டார்.

ஏற்கனவே மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளைத் தாக்கும் களமாகப் பயன்படுத்த வேண்டாம் என அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதனைக் கடைப்பிடிப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார். எனினும் கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சாடியமை தொடர்பில் பத்திரிகையில் செய்தி வெளியானபோது மிகவும் வேதனைப் பட்டேன்.

அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக பொன் மாஸ்டரை சந்தித்து உரையாடினேன். எனவே இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்துக் கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகிறேன்- என்றுள்ளது.

(அ-ம-20-26)

## திலீபனின்..

நினைவேந்தல்தொடர்பில்கடந்தசிலதினங்களாக நீடித்த சச்சைகள் நேற்றைய முதல் நாள் நினைவேந்தல் நிகழ்வில் குழப்பமாகவும் கருத்து மோதலாகவும் மாறின. தியாகி திலீபன் நினைவேந்தல் நிகழ்வை யார் செய்வது? என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் அணிக்கும், மணிவண்ணன் அணிக்குமிடையில் கடந்த 2 நாள்களாக முறுகல் நீடித்து வந்தது. ஒரே இடத்தில் இரண்டு தரப்புக்களும் வெவ்வேறு அஞ்சலி நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன. மணிவண்ணன் தரப்பு திலீபன் தூபியை சுத்தம் செய்து, அருகில் உருவப்படம் வைத்தபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அந்த உருவப் படத்தை மறைப்பதுபோன்று பந்தல் அமைத்திருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரு தரப்பையும் சமரசம் செய்யும் பேச்சுக்கள் நடந்தன. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பஷீர் காக்கா உள்ளிட்டவர்கள் இரு தரப்புடனும் பேசி, பொதுவான நினைவு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தனர். எனினும், இரு தரப்புக்குள்ளும் குழப்பம் நீடித்தது. தியாகி திலீபனின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்ய மணிவண்ணன் தரப்பு ஏற்பாடு செய்திருந்தது. எனினும், உருவப்படம் திரைநீக்கம் தேவையற்றது என இரவோடு இரவாக முன்னணியினர் அந்த ஏற்பாடுகளை அகற்றிவிட்டனர். அத்துடன், மணிவண்ணன் தரப்பினர் வைத்த படத்துக்கு முன்பாக கொடிகளையும் நட்டனர். நேற்று நிகழ்வு ஆரம்பிக்கும் தருணத்தில், அந்தக் கொடிகளை அகற்றும்படி பல்வேறு தரப்பினரும் அழுத்தம் கொடுத்த பின்னரே, முன்னணியினர் அதை அகற்றினர்.

நேற்றைய நிகழ்வை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தொகுத்து வழங்கினார். அவர் வழக்கம்போல, ஒட்டுக்குழுக்கள், துரோகிகள், 13ஆவது திருத்தத்தை ஆதரிப்பவர்கள் தொடர்பாகப் பேசினார். அப்போது, ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பஷீர் காக்கா அவரிடம் சென்று, 'நினைவஞ்சலியை குழப்பும் விதமாகப் பேச வேண்டாம், அரசியல் மேடையல்ல இது, அரசியல் பேசுவதெனில் தனியாக மேடையமைத்து பேசுங்கள்' - என்றார். இதையடுத்து, முன்னணியினர் பஷீர் காக்காவுடனும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். 'நினைவுநிகழ்வையும்குழப்புகிறார்களே' என கண்ணீர் மல்கியபடி பஷீர் காக்கா அங்கிருந்து ஒதுங்கினார்.

கடந்த சில வருடங்களாக நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் இடையூறு ஏற்படுத்தி வந்தனர். இம்முறை பாதுகாப்புத் தரப்பினர் இடையூறை ஏற்படுத்தாத போதும், தமிழர் தரப்புக்கள் தமக்குள் மோதி நினைவேந்தலையும், திலீபனின் தியாகத்தையும் கொச்சைப்படுத்தியமைகவலை தருகின்றது என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-ம-26)

## பாடசாலைகளுக்கும்...

தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மறைந்த 2ஆம் எலிசபெத் மகாராணியின் இறுதிக்கிரியைகள் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அன்றைய தினத்தை அரசாங்கம் விசேட விடுமுறை தினமாகவும் துக்கதினமாகவும் அறிவித்திருந்தது. இந்த நிலையில், பாடசாலைகளுக்கும் குறித்த விடுமுறையை வழங்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அன்றைய தினத்தை விடுமுறை தினமாக கருதி செயற்படுமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பிள்ளைகள்...

என்று மருத்துவர்களுடனான கலந்துரையாடலின்போது சிங்கள அதிகாரி ஒருவர் மிரட்டியுள்ளார்.

இலங்கையிலேயே வடக்கு மாகாணத்தில்தான் 4 ஆவது டோஸ் ஏற்றியவர்கள் குறைவாக உள்ளார்கள் என்றும் அந்தச் சிங்கள அதிகாரி தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் 4ஆவது டோஸை -காலாவதியான பைஸரை-0.8 சதவீதத்தினரே இதுவரை ஏற்றியுள்ளனர். இந்தத் தகவலை மறைத்து மேற்கண்டவாறு அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை- தடுப்பூசி தொடர்பான விடயங்களில் இதுவரைகாலமும் எந்தவொரு கடிதங்களோ, அறிவுறுத்தல்களோ, சுற்றறிக்கைகளோ அனுப்பாத வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, காலாவதியான தடுப்பூசி ஏற்றப்படாமல் இருப்பது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

காலாவதியான தடுப்பூசியை ஏற்ற முடியும் என்ற சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையையும் இணைத்து அவர் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார். (அ-ஒ-5)

## தியாக தீபம்...

பத்தகாத செயல்களால் இழிவுபடுத்த வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

1987ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அடங்கிய முக்கியமான, ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, அஹிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நிறைவும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்த முதல் நாள் இன்றாகும் (நேற்று).

உலகின் பல இடங்களில்நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நாளில், தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அந்தப் புனித மண்ணில் இன்று (நேற்று) அரங்கேறிய சில விரும்பத்தகாத செயல்கள் மக்களிடையே அறச்சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள் எவையுமே 35 வருடங்கள் கடந்தும் நிறைவேறாது அந்தரத்தில் தொங்கியே நிற்கின்றன. அவரது கனவுகளை மெய்ப்பிப்பதே தமிழ் மக்களது கடமையாகவும் உள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை உலக அரங்கில் கொச்சைப்படுத்தும் விதமான கீழ்த்தர விடயங்களை தவிர்த்து அடுத்த சந்ததிக்குக் கடத்தும் முக்கியமான பொறுப்பில் உள்ள நாம், போராட்டத்தையோ அது தொடர்பான தியாகத்தையோ இழிவுபடுத்த வேண்டாம் எனவும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து எம் தாயகத்தில் இடம்பெறக்கூடாது எனவும் வலியுறுத்துகின்றோம்- என்றுள்ளது.

(அ-ம-125-26-27)

**வேலையாட்கள் தேவை**

A-9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணி வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்

- காசாளர்
- சமையல் உதவியாளர்
- சிட்டை எழுதுநர்
- உணவு பரிமாறுபவர்கள்
- சமையலாளர்
- சுத்திகரிப்பாளர்

ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

**0773866250**

**10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் தில்லைநாதன் கமலாசினி**

பத்து ஆண்டுகள் மறைந்து விட்டது அம்மா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர்உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிராரத்திக்கின்றோம்.

கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**திரு.வையிரமுத்து நமசிவாயம் (அப்பிலிங்கம்)**

அல்லாரை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வையிரமுத்து நமசிவாயம் (அப்பிலிங்கம்) அவர்கள் (15.09.2022 ) வியாழக்கிழமை மாலை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வையிரமுத்து சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி சின்னம்மா அவர்களின் அருமை மருமகனும் காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, செல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தம்பு. கணபதிப்பிள்ளை. சடாச்சரம். பத்மநாதன். சிவராசா. காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும். நவநீதராசா-சௌந்தராணி. முருகானந்தன்-மனோரஞ்சிதராணி. இராசமனோகரன்-இரஜனி. இரவிக்குமார்-பிரேமளா. இரகுலேசன்-நளாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும். ருக்ஷி-மத்தியாஸ். பிறேமிகா. ஜனகன். வினுஜன்-சிவாஞ்சலி. பிரியந்தி. கிருத்திகா. நயனா. நர்த்தனா ஆகியோரின் தாத்தாவும். அமலிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது சகோதரியின் இல்லத்தில் இன்று (16.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாள் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

தகவல்: **குடும்பத்தினர்.**
**0770367260**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் நிகழ்வுகள் அனைவருக்கும் பொதுவே

## நெருக்கடிகளின்போது எங்கு சென்றீர்கள்? கேள்வி எழுப்புகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், செப். 16.
நினைவேந்தல் நிகழ்வுகள் எவருக்கும் சொந்தமானவையல்ல. அது தமிழ் இனத்தின் உரிமை என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், நினைவேந்தலை மேற்கொள்வதற்கு நெருக்கடியான காலங்கள் இருந்த பொழுது எங்கே சென்றீர்கள்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் நேற்றையதினம் இடம்பெற்ற அரசியல் குழப்பங்களை அடுத்து நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்துக்களை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசிய முன்னணியினருக்கும் மணிவண்ணன் அணியினருக்கும் இடையில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் நேற்று இடம்பெற்ற வாக்குவாதங்கள் ஏற்புடையனயல்ல. நினைவேந்தல்களை கட்சி சாராமல், தனிநபர்களின் விருப்பு மற்றும் வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அனைவரினதும் பொதுவான பங்களிப்புடன் நடத்தப்பட வேண்டியவை.

அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படமாட்டாது என்றவுடன் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்காக ஓடிவருபவர்களைப் பார்த்து நாங்கள் கேட்க விரும்புவது என்னவென்றால், பல நெருக்கடிகள் இருந்த பொழுதெல்லாம் எங்கே இருந்தீர்கள்? என்பதே. நான் யாரைச் சொல்லுகின்றேன் என்று அவர்களே புரிந்துகொள்ளட்டும்.

தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் 2020 ஆம் ஆண்டு கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தபிறகு ஒரு காகம்கூட பறக்கவில்லை. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் நான் அஞ்சலி செலுத்தியபோது என்மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதிவான் என்னை எச்சரிக்கை செய்த நிலையில் அதனை ஒரு சாதாரண வழக்காகத் தொடுத்தார்கள். தற்பொழுது அதனை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு பத்திரங்களை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நகர்த்தி வருகின்றார்கள்.

இவ்வாறிருக்கையில், இந்தமுறை நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நினைவேந்தல்களுக்குச் சிலர் சொந்தம் கொண்டாடுவதை ஏற்கவோ - அனுமதிக்கவோ முடியாது. கூட்டுப் பொறுப்புணர்வுடன் மக்களை அணிதிரட்டி மேற்கொள்ள வேண்டிய விடயம் இது - என்றார்.
(அ-ம-125-26)

# குளவிகள் தாக்கி 5 பேர் பாதிப்பு!

கைத்டி, செப் 16
கருங்குளவிகள் கூட்டாக கலைத்துக் கொட்டியதில், காணியொன்றில் வேலைசெய்து கொண்டிருந்த ஐந்து பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை மதியம் கைதடி கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சேதுகாவலர் இராசையா (வயது -83) மற்றும் சின்னப்பெடியன் ஜெகதீஸ்வரன் (வயது - 56), கதிரன் கந்தசாமி (வயது - 60), கந்தசாமி சஞ்சீவன் (வயது-35), ரஞ்சன் பிந்துஜன் (வயது - 28) ஆகிய ஐவருமே காயமடைந்தவர்கள்.

ஐந்து பேரும் சிகிச்சைக்காக உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.
(அ-ம-288)

## இலங்கைக்கு...

இந்த வருடம் 4 பில்லியன் டொலரை வழங்கியுள்ள நிலையில், புதிய நிதியுதவியை வழங்கும் திட்டம் எதுவும் இந்தியாவிடம் இல்லைஎன விடயமறிந்த இரண்டு தரப்பினர் ரொய்ட்டரிடம் தெரிவித்துள்ளனர்.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையை தொடர்ந்து மீண்டும் உறுதியான நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படும் பின்னணியில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மே மாதத்துக்கும் ஜூலை மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் காணப்பட்டது போன்ற பாரதூரமான நிலைமை தற்போது இல்லை என்றும் ரொய்ட்டர் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை- இந்தியாவின் ஆட்சேபணையையும் மீறி, அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் சீனச் செய்மதிக் கப்பலை இலங்கை அனுமதித்ததால் இந்தியா கடும் சீற்றம் கொண்டிருந்தது. அதன் வெளிப்பாடாகவே , நாணய நிதியத்தின் உதவியைச் சாட்டாக வைத்து இலங்கைக்கான நிதியுதவியை இந்தியா நிறுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.
(அ-ம)

## திலீபனை...

தத்தைத் திணிப்பதற்கு இந்திய - இலங்கை அரசாங்கங்கள் கங்கணம் கட்டிச் செயற்படும் சூழலில், இதற்கு எதிராக ஈழத் தமிழர்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்துவது அரசியல் என்றால், அந்த அரசியலை நாங்கள் செய்வோம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான க.சுகாஷ்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
'ஒற்றையாட்சிக்கும் 13ஆம் திருத்தத்துக்கும் எதிராக உண்ணாமலிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தியாக தீபம் அண்ணன் திலீபனின் வழியில் பயணிக்க அவரின் நினைவுநாளில் சபதமெடுப்போம்' என்று கூறுவது எந்த வகையிலும் அரசியலாகாது.

இதை யாராவது அரசியலாகக் காட்ட முற்படுவார்களென்றால் அந்த அரசியலை நாங்கள் தொடர்ந்தும் செய்துகொண்டே இருப்போம். ஒற்றையாட்சியையும் 13ஆம் திருத்தத்தையும் அவற்றை ஏற்கின்ற அரச ஆதரவு ஒட்டுக்குழுக்களையும் எதிர்க்கவேண்டியது நிராகரிக்கவேண்டியது விடுதலையை நேசிக்கும் ஈழத் தமிழினத்தின் வரலாற்றுக் கடமை.

இதை யாராவது தவறென்று கூறுவார்களென்றால், அவ்வாறு கூறுவோர் ஒற்றையாட்சியையும் 13 ஆம் திருத்தத்தையும் அவற்றை ஏற்கும் - ஏற்கத் தயாராகும் துரோகக் கும்பல்களையும் காப்பாற்ற முற்படுகின்றனரா? என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது. இது வேதனையான விடயம்.

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரும் கடிதத்தை சோரம் போன தமிழ்த் தலைமைகளிடமிருந்து இந்திய அரசு பெற்றுக்கொண்டுள்ளது. ஈழத் தமிழினத்தின் இனப்பிரச்சினை மற்றும் இனப்படுகொலை விவகாரத்தை வெறும் 13ஆம் திருத்தத்துக்குள் முடக்க இலங்கை - இந்திய அரசுகளும் கங்கணம் கட்டிச் செயற்படும் இச்சூழலில், குறிப்பாக கடந்த 12ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 13 ஆம் திருத்தத்தை இந்தியா வலியுறுத்திய நிலையில், அதற்கு எதிராக ஈழத் தமிழினம் தனது அபிலாஷைகளை வலியுறுத்துவதைத் தடுக்கும் முயற்சியாகவே பஷீர் காக்காவின் கருத்தை பார்க்க வேண்டியுள்ளது - என்றுள்ளது.
(அ-ம-27-26)

## இருபாலையில்...

இருபாலை, டச்சு வீதியிலுள்ள வீடொன்றில், விடுதலைப் புலிகளின் நகைகளும், ஆயுதங்களும் இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்துள்ளதால், அங்கு அகழ்வுப்பணியை மேற்கொள்ள யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திடம் கோப்பாய் பொலிஸார் நேற்று அனுமதி கோரியுள்ளனர். நீதிமன்றத்தின் அனுமதிபெற்று விரைவில் குறித்த இடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த அகழ்வுப் பணிகளுக்காக கொழும்பில் இருந்து சிறப்புக் குழுவொன்றும் வரவழைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அந்தக் குழு நீதிமன்ற அனுமதியுடன் இன்று அகழ்வை மேற்கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## உண்மையை...

தெரியவந்துள்ளது. யாழ். நகரப் பாடசாலைகளில் பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றாதவர்களுக்கும், மூன்றாவது டோஸ் ஏற்ற விரும்புபவர்களுக்கும் சுகாதாரத் திணைக்களத்தால் ஊசி ஏற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்குப் பயன்படுத்தப்படும் பைஸர் தடுப்பூசி கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது. இருப்பினும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அதனை எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையில் பயன்படுத்தமுடியும் என்று சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஊடாகத் தெரியப்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் காலாவதியான தடுப்பூசியை ஏற்றும் செயற்பாட்டை வடக்கு மாகாண முன்னாள் சுகாதார பணிப்பாளராக இருந்த மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தவிர்த்து வந்தார். புதிய சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் திலிப் லியனகே நியமிக்கப்பட்ட பின்னர் அந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கோ, அவர்களின் பெற்றோருக்கோ, அதிபர்களுக்கோ காலாவதியான தடுப்பூசி ஏற்றப்படுகின்றது என்ற தகவல் தெரிவிக்கப்படாமல் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 'உதயன் பத்திரிகை' இந்த நடவடிக்கையை நேற்றைய தினம் வெளிச்சத்துக்கு கொண்டுவந்ததையடுத்து சில பெற்றோர் பாடசாலை அதிபர்களிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்பியதாக அறியமுடிகின்றது. (அ-ஒ-5-125)

## தீர்மானங்களை...

சம்பந்தனும், அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புரிந்துகொள்ளவேண்டும் - இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாட்டைத் துண்டாக்க முயலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எந்தக் கருத்துக்களுக்கும் அரசு செவிசாய்க்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், அதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
'ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது தீர்மானங்கள் அடுக்கடுக்காக நிறைவேற்றப்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரதான காரணம், இது அனைவருக்கும் தெரிந்த விடயம். கடந்த நல்லாட்சி (மைத்திரி - ரணில்) அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கை மேலோங்கி இருந்தமையால் இலங்கை மீதான அன்றைய ஐ.நா. தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியிருந்தமை மாபெரும் தவறாகும்' - என்றார். (அ-ம-22)

## இலங்கைக்கு...

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் (எப்.ஏ.ஓ.) இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி விமலேந்திரா ஷரன், விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஷ்பகுமார ஆகியோர் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர முன்னிலையில் நேற்றுக் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்வரும் பயிர்ச்செய்கைப் பருவங்களில் உற்பத்தியை மேம்படுத்துவதற்காகவும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் அதன் பங்காளிகளின் உதவியுடன், யூரியா மற்றும் ட்ரிப்பிள் சுப்பர்பொஸ்பேற் உர வகைகளை இலங்கைக்கு வழங்கும் - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

uthayan--05.07.2022

# அமைச்சரவையில் மோசடியாளர்கள்!

## பவ்ரல் அமைப்பு கண்டனம்

**கொழும்பு, செப். 16**

**மோசடிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்ட நபர்களை அமைச்சரவைக்கு நியமித்ததன் மூலம் ஜனாதிபதி நாட்டுக்கு வழங்கப்போகும் செய்தி பாரதூரமானதாகும் என்று பவ்ரல் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ளவேண்டிய சந்தர்ப்பத்தில், அரசாங்கம் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பு அளவிடமுடியாது. இலங்கை பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்குள் மூழ்கி இருக்கும் நேரத்தில், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் என்போரை பெருமளவில் நியமித்துக்கொண்டு, அரசியல் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் மகிழ்ச்சிப்படுத்தி மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள சுமை பெரியதாகும். செயல்திறன் குறைவு என அரச ஊழியர்களை குறைப்பதற்கு பிரேரிக்கும் ஜனாதிபதி, இந்தளவு பெரிய அமைச்சரவையை நியமித்து, எவ்வாறு அதனை நியாயப்படுத்துவது என்பது விவாதிக்கப்படவேண்டிய விடயமாகும். அத்துடன், மக்கள் பிரதிநிதிகளின் செயற்திறனை அளவிடுவதற்கு முறையொன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும் - என்றுள்ளது. (ம)

### அறிக்கைகளால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளார் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க.

ஜெனிவாவில் இலங்கை மீது வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்புசபை, போரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு ஆகியவையே இவ்வாறு வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'இலங்கை மீது வெளியில் இருப்போர் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. எமது நாடு இறைமையுள்ள நாடு. சர்வதேச தீர்மானங்களையோ அல்லது சர்வதேச சட்டங்களையோ இலங்கை மீது பிரயோகிக்கமுடியாது. இங்கு பிரச்சினைகள், குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அது தொடர்பில் உள்ளகப் பொறிமுறையூடாகத்தான் ஆராய்ந்து பார்க்க முடியும். உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளியகப் பொறிமுறை அவசியமில்லை. அதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்' - என்றார். (அ-ம-22)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் மின்சார இலத்திரனியல் காட்சியறை ஒன்றிற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு ஆண் வேலையாட்கள் தேவை.

1) காட்சியறை பொறுப்பாளர் 2) கணக்காளர்
3) விற்பனை உதவியாளர்

**0761379330**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூரத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

**076 7558 606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **077 6585 999**
**076 4365 814**
**077 8748 135**

## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.**

- **கணக்காளர்:**
  A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:**
  வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
**இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 224 5511**


## ரணிலை சூழ மொட்டுக்கட்சி ஐ.தே.கவினர் கடும் அதிருப்தி

**கொழும்பு, செப். 16**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தற்போது மொட்டுக்கட்சியினரே சூழ்ந்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் மேற்கொள்ளும் சுற்றுப்பயணங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களுக்கு உரிய முறையில் அறிவிக்கப்படுவதில்லை.

அரசியல் ரீதியில் ஜனாதிபதியை சுற்றி பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர்களும் உறுப்பினர்களுமே செயற்படுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கதிர்காமம் சென்றபோதும் மொட்டுக்கட்சியினருக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)


**0778840573**

**பிரத்தியேக வகுப்புகள்**
**English Medium** (தமிழ் மீடியம்)
**A/L** மற்றும் **6 -11** விவசாயம், விஞ்ஞானம்.
**077 597 2153**


## அந்தியேட்டி கிரியைகள் பிற்போடல்

**அமரர் சின்னையா பாலசந்திரன்** (சந்தனா)
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்றும்
(16.09.2022) நாளையும் (17.09.2022)
நடைபெற இருந்தது. **இதனை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது**
என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்
**077 271 9275**

(cr.38089) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவலை

தோற்றம் 04 - 04 - 1941

மறைவு 27 - 09 - 2021



புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சுப்பையா செல்லத்துரை

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள், உறைந்துவிட்டது
உற்றார் உறவினர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
சகோதரர்களின் இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனை சங்கமிக்கும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.09.2022) அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
**077 6144423**
**076 4252015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org